## தேசிய ஆராய்ச்சி பேரவை - 2018

-----------------------------------------------------------

### 1.1 அபிப்பிராயம்

தேசிய ஆராய்ச்சி பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய ஆராய்ச்சி பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் பேரவையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

## 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக ரூபா 91,382 கூட்டுத்தொகையான மீண்டுவரும் செலவுகள் மீளாய்வாண்டில் செலவொன்றாக பதியப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இந்த முற்கொடுப்பனவுக்கு ஏற்புடைய கணக்குப் பதிதலை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது2019 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக கணக்குகளில் பதிய வேண்டும் என |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வுக் கட்டணமாக 2017ஆம் ஆண்டின் மூன்றாம் நான்காம் காலாண்டுகள் பொருட்டு செலுத்தப்பட்ட ரூபா 231,000 தொகை மீளாய்வாண்டில் கட்டடப் பராமரிப்புச் செலவின் கீழ் பதியப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டின் செலவினங்களை திரட்டு மிகைக்கு சீராக்காமல் மீளாய்வாண்டில் செலவொன்றாக காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தினால் குறைத்து | 2017ஆம் ஆண்டிற்கு ஏற்புடைய அட்டுறு செலவுகளை செலுத்துவதற்கான கணக்குப் பதிதலை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது 2019 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள்மூலம் சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும. | சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக கணக்குகளில் பதிய வேண்டும் என |

காட்டப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டினுள் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் மூன்று ஊழியர்களின் சேவை தொடராது எனக் கருதி அவர்களுக்காக ரூபா 447,819பணிக்கொடை செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுக்காக போதியளவு பணிக்கொடை ஏற்பாடு முந்திய வருடங்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. | தேசிய ஆராய்ச்சி பேரவைமுந்திய வருடங்களில் பணிக்கொடை ஏற்பாடு செய்திருப்பது அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டேயாகும். 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின்படி பணிக்கொடை செலுத்தும் பொருட்டு அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக படிகளையும் அடிப்படையாகக் கொள்வதற்கு 2018 மே 18 ஆம் திகதி நடைபெற்ற 80ஆவது பேரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்தது.அதற்கிணங்க, பணிக்கொடை செலுத்துவதற்கு அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக படிகளையும் ஏற்புடையதாக்கியதன் காரணமாக பணிக்கொடை செலுத்துவதற்கான ஏற்பாடுபோதியளவாக இருக்கவில்லை. | சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப செயலாற்ற வேண்டும் என |
| (ஈ) | 2016 சனாதிபதி விருது வழங்கும் வைபவத்தில் (President’s Awards for Scientific Publication)விருதுபெற்றவர்களின் பெயர்கள் செய்தித்தாள் மூலம் பிரசுரிப்பதற்கு செலவான ரூபா 310,063 தொகையைசனாதிபதி விருது வழங்கும் வைபவ(PASP)செலவாக பதியாமல் அதனை நிறுவனத்தின் விளம்பர செலவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் சனாதிபதி விருது வழங்கும் வைபவம் பொருட்டு பொது திறைசேரியிலிருந்து கிடைத்த தொகை ரூபா 04 மில். ஆகும்.எனினும் இந்த வைபவம் பொருட்டான செலவு ரூபா 04 மில். தொகையை விஞ்சியது. தேசிய ஆராய்ச்சி பேரவையினால் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்படும் அச்சிடல் மற்றும் விளம்பர நடவடிக்கைக்காக உறப்படும் செலவு பொருட்டு இந்த செலவுத் தலைப்பு ஒதுக்கப்படுகின்றமையினால் சனாதிபதி விருது வழங்கும் வைபவத்தின் விளம்பரம் பொருட்டுமேற்கொண்ட செலவு அச்சிடல் மற்றும் விளம்பர செலவாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | உரிய வரவுசெலவு எல்லைக்குள் செலவுகளை மேற்கொள்ள வேண்டும் என |
| (உ) | சனாதிபதி விருது வழங்கும் வைபவம் பொருட்டு அனுசரணையாளர்களிடமிருந்து வருடத்தினுள் கிடைத்த ரூபா 900,000 தொகைநேரடியாக பிற பெறுவனவுகளின் கீழ் வருடத்தின் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இந்த வைபவம் பொருட்டு உறப்பட்ட முழுச் செலவுகள் | சனாதிபதி விருது வழங்கும் வைபவம் பொருட்டு உறப்பட்ட முழுச் செலவு ரூபா 4,852,970.35 ஆகும். இதில் ரூபா 852,970.35 தொகைவருடத்தின் வருமானமாக இருதடவைகள் பதியப்பட்டமை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக கணக்குகளில் பதிய வேண்டும் என |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வருடத்தின் வருமானமாக பதியப்பட்டமையினால் இந்த ரூபா 900,000தொகைஇருதடவைகள் வருமானமாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2018 கணக்கீட்டு காலப்பகுதியினுள் Outreach செயற்றிட்டம் பொருட்டு செலுத்தப்பட்ட இரு பிரயாணச்செலவுகள் குறித்த செயற்றிட்ட செலவாக கருதாமல் நிறுவனத்தின் பொதுவான செலவொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இந்தசெயற்றிட்டத்துக்குரிய எல்லா செலவுகளும் வருடத்தின் வருமானமாக பதியப்படுகின்றமையினால், மேற்குறிப்பிட்ட விடயத்தின் மீதான ரூபா55,044 பெறுமானம் வருடத்தின் வருமானத்தில் சேர்த்தல் தவிர்க்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக கணக்குகளில் பதிய வேண்டும் என |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 993,816 ஆன 04 விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கீழ் இனங்காணப்பட்டிருந்ததுடன், நியாயமான காரணமின்றி இந்த சொத்துக்கள் பொருட்டான நிறுவனத்தின் தேய்மானக் கொள்கை நூற்றுக்கு0 என காட்டப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தேய்மானக் கொள்கையின்படி இந்த விடயங்களை தேய்விடும் வீதம் நூற்றுக்கு 0 என காட்டப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் வருடம் பொருட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இந்த விடயங்களை காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணி தவிர்ந்த ஏனைய சகல சொத்துக்களையும் தேய்மானம் செய்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------------- | ------------------------------- | --------------- |
| (அ) | 2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய ஆராய்ச்சி பேரவைச் சட்டத்தின் 03(ஆ) பிரிவு | தேசிய தேவைப்பாடுகளுக்கு பங்களிக்கும் ஆராய்ச்சி மன்றமொன்றை விருத்தி செய்வதற்காக வசதியளித்தல் பேரவையின் பணியான போதிலும் ஆராய்ச்சி செயற்றிட்டம் | Science Citation Intern இல் பிரகடனத்தை செய்யும் ஆற்றல் ஏதேனும் விஞ்ஞானம்சார் ஆராய்ச்சி ஒன்றின் பெறுபேறுகளின் செல்லுபடித்தன்மை தொடர்பிலான ஆக்கமொன்றாகும். தேசிய ஆராய்ச்சி பேரவை இந்த பிரமாணங்களுக்கு மட்டுப்படாத போதிலும் ஆராய்ச்சியாளர் வெற்றியை அளக்கும்போது | ஆராய்ச்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்னரும் முடிவடைந்த பின்னரும் ஆராய்ச்சியின் பெறுபேறுகள் தேசிய தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் |

| | | |
|---|---|---|
| ஒன்றின் இறுதி பெறுபேற்றினை மதிப்பிடுகையில் அதன் வெற்றியை தீர்மானிக்கும் பிரமாணமாகScience Citation Index(SCI) இல் பிரகடனத்தை செய்யும் ஆற்றல் கருத்தில் எடுக்கப்படுவதுடன் ஆராய்ச்சியின் பெறுபேறு, அதன் தாக்கம் மற்றும் பிரயோகப்பாவனை பற்றிய கணியரீதியிலான கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | விசேட ஆராய்ச்சிரீதியான பெறுபேறு அதன்மூலம் உருவாகுகிறதா இல்லையா என விசாரித்து பார்ப்பதற்கு சருவதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் அடிப்படைக் கோடு ஒன்றினை பயன்படுத்துதல் தவிர்க்கமுடியாத விடயமொன்றாகும். இங்கு குறித்த அடிப்படைக் கோட்டின் பணி நிறைவேற்றப்படுகிறது. இது,தேசிய ஆராய்ச்சி பேரவையின் ஆரம்பம் முதல் இடம்பெற்றதொன்றாகும். அதற்கு சிறந்த உதாரணம் யாதெனில், புதிதாக பிறந்த குழந்தைகள் தொடர்பில் குறை தைரொயிட்டு பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காகவழங்கப்பட்ட பரிந்துரையை சுகாதார துறையின் தேசிய கொள்கை ஒன்றாக மாறியமையாகும். இது தேசிய ஆராய்ச்சி பேரவையின் நிதியீட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பெறுபேறு ஒன்றாகும். | வகையில் சமூகமயப்படுத்தும் ஆற்றல் பற்றி கவனத்திற் கொள்ள வேண்டும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 5,501,052 மிகையாக இருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,084,738 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 4,416,314 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீண்டெழும் நிதியேற்பாட்டு பெறுவனவு ரூபா 1,825,924 ஆல் அதிகரித்திருந்தமையும், அஸ்பெஸ்டஸ் செயற்றிட்டம் பொருட்டு கிடைத்த ரூபா 5,120,440 நிதியேற்பாடு பயன்படுத்தாதிருந்தமையும் பிரதான காரணங்களாக விளங்கின.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------------- | ---------------------------------------- | ----------------- |

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்றிட்டங்களை வினைத்திறனாகவும் எதிர்பார்த்த காலப்பகுதியினுள் முடிவுறுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு உபகரணக் கொள்வனவினை தாமதமின்றி மேற்கொள்வதற்காக பெறுகைத் திட்டம்/கால வரையறை ஒன்றினை ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | தேசிய ஆராய்ச்சி பேரவையின் வழிகாட்டுநெறிக் கோவையின்படிஆராய்ச்சி செயற்றிட்டங்கள் பொருட்டு நிதியங்கள் வழங்கப்பட்டு 09 மாதங்களினுள் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பெறுகை அங்கீகாரத்தை பெறுவதற்கு செயற்றிட்ட ஆராய்ச்சியாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதுவரையில் ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் பெறுகை அங்கீகாரத்தைப் பெறும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதன் மூலம் செயற்றிட்ட ஆராய்ச்சியாளர்களை தூண்டுவதற்கு பேரவையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கிணங்க, பல செயற்றிட்ட ஆராய்ச்சியாளர்கள் முதல் 09 மாதங்களினுள் பெறுகை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், ஏனைய ஆராய்ச்சியாளர்களுக்கு இடம்பெறும் தவிர்க்கமுடியாத காரணங்களின் பேரில் 09 மாதங்களினுள் பெறுகை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாமற்போகும்.<br>திட்டங்களை தயாரிப்பதனால் ஏற்படும் மட்டுப்படுத்தல்கள் மூலம் ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் மந்தமடைவதற்கு அல்லது புதிய செயற்றிட்டங்கள் உருவாவதற்கு தூண்டுதல் ஏற்படாது. | ஆராய்ச்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்குத் தேவையான உபகரணங்கள் எவை மற்றும் அவற்றை கொள்வனவுசெய்தல் தொடர்பில் திட்டம்ஒன்றை தயாரித்தல் வேண்டும் என. |
| (ஆ) | முன்னேற்ற அறிக்கைகளுக்கு ஏற்புடைய மதிப்பீட்டாளர்களின் கருத்து தெரிவித்தல் தொடர்பில் ஆராய்ச்சியாளரை விழிப்பூட்டிய போதிலும் அதுபற்றிய மறுமொழியை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான முறையியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்ற அறிக்கைகளுக்கு ஏற்புடைய மதிப்பீட்டாளர்களின் கருத்து தெரிவித்தல் தொடர்பில் ஆராய்ச்சியாளர்கள் விழிப்பூட்டப் படுகின்றனர். சில ஆராய்ச்சியாளர்கள் அதற்குரிய மறுமொழியை காட்டுவதுடன் சில ஆராய்ச்சியாளர்களிடமிருந்து மறுமொழிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் காணப்படுகிறது. இதுதொடர்பில் மறுமொழிகளை உடனடியாக பெற்றுக்கொள்ளும் முறையியல் ஒன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது. | ஆராய்ச்சி முடிவடைந்தவுடனே முன்னேற்ற அறிக்கையைப் பெற்றுக்கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் அம்மதிப்பீடு தொடர்பில் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்றவாறு வினைத்திறனான முறையியல் ஒன்றை தயாரித்தல் வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆராய்ச்சியாளர் அடிப்படை ஆராய்ச்சிசெயற்றிட்டங்களின்(ID grants) முன்னேற்றத்தை மதிப்பிடுகையில் ஆராய்ச்சியாளர் வழங்கும் முன்னேற்ற அறிக்கை மட்டும் மதிப்பிடப்படுவதுடன் பௌதிகரீதியில் பரீட்சித்துப் பார்த்து முன்னேற்றத்தை மீளாய்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சியாளர் அடிப்படை ஆராய்ச்சிசெயற்றிட்டங்களின்முன்னேற்றத்தை மதிப்பிடுகையில் ஆராய்ச்சியாளர் வழங்கும் முன்னேற்ற அறிக்கை மட்டும் மதிப்பிடப்படுவதில்லை. வருடத்துக்கொரு முறை தேசிய ஆராய்ச்சி பேரவையின் அலுவலரொருவர் இயைபான நிறுவனங்களுக்குச் சென்று பதிவேட்டுப்பொருள்(இன்வென்றி) சோதனையில் ஈடுபடுவதுடன் பௌதிகரீதியில் பரீட்சித்தும் பார்க்கிறார். | ஆராய்ச்சிசெயற்றிட்டங்களின்முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக முறையான நடைமுறையொன்றை செயற்படுத்தல் வேண்டும் என. |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 16,024,000 கிரயம் கொண்ட 03 செயற்றிட்டங்களை வர்த்தகமயப்படுத்தும் பொருட்டு மேம்படுத்தும் திறன் உள்ளது என இனங்காணப்பட்டிருப்பினும் அதன்பொருட்டு செயலாற்றி இருக்கவில்லை. | தேசிய ஆராய்ச்சி பேரவையினால் செயற்படுத்தப்படுகின்ற Investigator Driven Research Grant செயற்றிட்டங்கள், ஆரம்பஆராய்ச்சிகளாகும் என்பதுடன், அவற்றின் முக்கிய நோக்கமாவது நாட்டினுள் விஞ்ஞானத்தை விருத்திசெய்வதாகும் என்பதுடன்வர்த்தகமயப்படுத்துதல் குறித்த செயற்றிட்டங்களிலிருந்து பெருமளவில் இடம்பெறுவதில்லை. எனினும்,03 செயற்றிட்டங்களை வர்த்தகமயப்படுத்தும் பொருட்டு மேம்படுத்தும் திறன் உள்ளது என இனங்காணப்பட்டுள்ளது. தற்போது, 2005 முதல் 2011 வரை முடிக்கப்பட்ட 50 செயற்றிட்டங்கள் பொருட்டான தொடர் நடவடிக்கை தேசிய ஆராய்ச்சிபேரவையின் கவுன்சிலினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிணங்க,மேற்படி 03 செயற்றிட்டங்கள் பொருட்டும் தொடர் நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | வர்த்தகமயப்படுத்தக்கூடிய ஆராய்ச்சிகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தக்கூடிய முறையியல் ஒன்றை இனங்காண வேண்டும் என. |
| (ஆ) | வல்லபட்டா தாவர வகையின் சுரப்புவர்த்தகமயப்படுத்துவதற்காக உகந்தவாறு மேம்படுத்தல் மற்றும் நாற்று மேடைகளை உருவாக்கும் பொருட்டு தனியார் கம்பனி ஒன்றுடன் 2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 11,583,792 கிரயத்துடனான | தேசியவல்லபட்டா தாவர தண்டில் இருந்து பெறும் சுரப்புக்கு வெளிநாட்டில் அதிக கேள்வி உள்ளது என்பது நன்கு அறிந்த விடயமாகும். எனினும், எமது நாட்டின் சட்ட முறைமையின்படி, அதனை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இல்லை என்பதுடன் இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கமாக அமைந்ததுவல்லபட்டா தாவரத்திலிருந்து பெறும் | ஆராய்ச்சியொன்றை ஆரம்பிக்கும்போது அதன் பெறுபேறுகளை மேம்படுத்துவதற்காக தாக்கம் செலுத்தக்கூடிய சமூக, பொருளாதார காரணிகளையும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சிசெயற்றிட்டம் 2017 திசெம்பர் மாதத்தில் வெற்றிகரமாக முடிவடைந்திருந்தது. இந்த செயற்றிட்டம் பொருட்டு ஆராய்ச்சி பேரவைரூபா 5,687,500 தொகை செலவு செய்திருந்தது. நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி மூலம் பெருமளவு வருமானத்தை பெற்றுக்கொள்ளுதல் என்பன எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2019 மே மாத கணக்காய்வு திகதி வரையிலும் வல்லபட்டா தாவரத்தின் பாகங்களை ஏற்றுமதி செய்வதற்காக தேவையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தவறி இருந்தது. ஆதலால் செயற்றிட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை அடைய முடியாதிருந்தது. | உற்பத்திகளை அறிமுகப்படுத்தி அதன்மூலம் ஏற்றுமதி பெறுமதியை மேலெழுப்புவதாகும். அங்கு ஆராய்ச்சி பங்காளர் பல்வேறு அமைச்சுக்களின் உதவியை நாடியுள்ளதுடன் அங்கு அவருக்கு கிடைத்துள்ள அறிவுரையாவது இந்த பிரித்தெடுப்புக்கு ஏதேனும் திரவத்தை சேர்ப்பதன்மூலம் அதன் பெறுமதியை குறைத்து ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எனவாகும். எனினும், வெளிநாட்டு கைத்தொழில்களில் இந்த பிரித்தெடுப்பினை தூய (Pure) ஆக கோருவதனால் மேற்படி முறையை கடைப்பிடிப்பதன் மூலம் பலன் இல்லை என ஆராய்ச்சி பங்காளரின் கருத்தாக அமைந்தது. | கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் முகாமைத்துவ உதவியாளர் இருவரை ஆட்சேர்ப்பதற்காகரூபா102, 075 செலவு செய்திருந்தும் 2019 மே மாதம் வரையிலும் இயைபான ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை. | மீளாய்வாண்டு பொருட்டு தேசிய ஆராய்ச்சி பேரவை முகாமைத்துவ உதவியாளர் இருவரை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்களை அழைத்திருந்ததுடன் அதற்கு ஏற்புடைய ஆரம்ப பரீட்சித்தல் நடவடிக்கை(Screening)கவுன்சிலின் அங்கீகாரத்தின் பேரில் தேசிய ஆராய்ச்சி பேரவை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக ரூபா102,075 செலவு உறப்பட்டிருந்தது. இருப்பினும்,ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்காக அதிக செலவினை மேற்கொள்வதற்கு நேரிடக்கூடும் என்பதனை இனங்கண்டதன் காரணமாக ஆட்சேர்ப்பும் தாமதமாகியது. | ஆட்சேர்ப்பினை பூர்த்தி செய்ய வேண்டும் என. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டினுள் தேசிய ஆராய்ச்சி பேரவை பொருட்டு கொள்வனவு செய்த ரூபா 105,992 ஆன மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் காற்றுச் சீராக்கி உதிரிப்பாகங்கள் தொடர்பாக பதிவுகள் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனம் பொருட்டு காற்றுச் சீராக்கி உதிரிப்பாகம் பொருத்தப்பட்டதுடன், அதற்காக ரூபா 105,992 தொகை செலவாகியது. அது நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருப்பினும் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதனை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு இருப்பு பதிவேட்டில் சரியாக பதிவு செய்தல் வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஆராய்ச்சி அளிப்புக்கு ஏற்புடையதாக ரூபா 1,775,313 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணமொன்று இருப்பு பதிவேட்டில் ரூபா 597,005என காட்டப்பட்டிருந்தது. | இந்த உபகரணத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 1,775,312 ஆக இருந்ததுடன் அது 7 வவுச்சர்களினால் செலுத்தப்பட்டிருந்தது. ஒரு வவுச்சரின் பெறுமதி மட்டும் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருந்தது. இந்த உபகரணத்தின் பெறுமதி ரூபா 1,775,312 என சரிசெய்யப்பட்டது. | கொள்வனவு இருப்பு பதிவேட்டில் சரியாக பதிவு செய்தல் வேண்டும் என. |

## 3.3 செயற்றிட்ட அல்லது மூலதன பணி

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வவுனியா மாவட்டத்தின் கிராம அலுவலர் பிரிவினுள் குடிநீர் மற்றும் வீடு சார்ந்த நீரில் புளோரைட் மட்டம் மற்றும் செறிவைகுறைப்பதன்மூலம் சிறுநீரக நோயை இழிவுபடுத்துவதற்கான தாக்கத்தினை இனங்காணும் முகமாக ஆராய்ச்சி பேரவை தனியார் கம்பனியுடன் ஒன்றிணைந்து 2014 ஆம் ஆண்டில்ரூபா 20,218,000 கிரயம் கொண்டசெயற்றிட்டம் ஒன்றினை ஆரம்பித்திருந்தது. 2017 ஆகஸ்ட் மாதம் முடிவடைந்த இந்த செயற்றிட்டம்பொருட்டு 2019 பெப்ரவரி மாதத்தில் மேற்கொண்ட இறுதி அறிக்கை மதிப்பீட்டின்படி இச்செயற்றிட்டம் விஞ்ஞானரீதியில் வெற்றியடைந்த போதிலும் அரச தனியார் பங்குடமை (PPP)செயற்றிட்டம் என்றரீதியில் தோல்வியானது என காட்டப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதி வரையிலும் இந்தச் செயற்றிட்டம் தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானம் எடுத்திருக்கவில்லை என்பதுடன் ரூபா1,860,437 தொகை இயைபான கணக்கில் பணியின்றி | 2014 ஆம் ஆண்டில்தேசிய ஆராய்ச்சி பேரவை, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் லின்க் நச்சுரல் தனியார் நிறுவனத்துடன் ஒன்றுசேர்ந்து அரச-தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வவுனியாவின் செட்டிக்குளம் பிரதேசம் மாதிரி ஒன்றாக தெரிவுசெய்யப்பட்டு அங்கு வாழும் மக்களின் CKDuநோய் நிலமையை கட்டுப்படுத்துவதற்காக இந்த செயற்றிட்டம்ஆரம்பிக்கப்பட்டது. அங்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் இச்செயற்றிட்டத்துக்குரிய நீர் சுத்திகரிப்பு பொறி மூலம் தொடர்ந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் விநியோகிப்பதற்கு செயற்றிட்டக் குழு நடவடிக்கை எடுத்ததுடன் அவ்வாறு 03 வருடங்கள் முழுவதும் சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிப்பதன்மூலம் பிரதேசவாசிகளின் சுகாதாரத் தன்மையை மேம்படுத்துவதற்கு இயலுமாக இருந்தது என்பது ஆராய்ச்சிக் குழுவின் நம்பிக்கையாகும். அத்துடன், இந்தச் செயற்றிட்டம் மூலம் மருத்துவ சிகிச்சைகளை நடாத்தி சுத்திகரிக்கப்பட்ட நீரை பயன்படுத்தும் மக்களின் நோய் நிலமைகளின் பிரமாணங்கனை அளப்பதன்மூலம் அதற்கு ஏற்புடைய பெருமளவு தரவுகளை திரட்டிக் கொள்வதற்கு ஆராய்ச்சிக் குழுவிற்கு இயலுமாக இருந்தது. அதாவது இந்தச் செயற்றிட்டம் மூலம் செட்டிக்குளம் பிரதேசவாசிகளின் CKDuநோய் நிலமையை கட்டுப்படுத்துவதற்கு ஏற்புடைய பெருமளவு தரவுகளை திரட்டிக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இத்தகைய ஆராய்ச்சிகள் மூலம் பெறப்படும் தகவல்களை விஞ்ஞானரீதியிலான வெளியீடுகளில் பிரசுரிப்பதன்மூலம் அவற்றை CKDu நோய் நிலமைக்குரிய எதிர்கால ஆராய்ச்சி நடவடிக்கைகள் பொருட்டும் பயன்படுத்த முடியும். செட்டிக்குளம் பிரதேசம் மாதிரியாக | ஆராய்ச்சி முடிவடைந்தமையினால் எஞ்சிய நிதியை பயனுறு பணிகள் பொருட்டு பயன்படுத்துதல் உகந்தது என. |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. | பயன்படுத்தப்பட்டு பெறப்பட்ட தரவுகளை ஒன்றுசேர்ப்பதன்மூலம் பெற்ற முடிவினை எதிர்கால ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தக்கூடியவாறு விஞ்ஞானரீதியிலான வெளியீடுகளில் பிரசுரித்தல்,CKDuநோய் நிலமைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு உறுதுணையாக அமையும். | |
| (ஆ) | செலவுமதிப்பீடு ரூபா 50 மில்லியன்களான Locally development sustained release tablets எனும் அரச தனியார் பங்குடமை செயற்றிட்டம் பொருட்டு தேசிய ஆராய்ச்சி பேரவையின் பங்களிப்பு ரூபா 25 மில்லியன்களாக இருந்தது. ஒரே தடவையில் எடுக்கும் மாத்திரை ஒன்றின் மூலம் நாள் முழுவதும் படிப்படியாக உடலுக்கு மருந்தினை அகத்துறிஞ்சக்கூடிய விதத்தில் மாத்திரை ஒன்றை விருத்திசெய்யும் நோக்காகக் கொண்ட இந்த செயற்றிட்டம் 2018 நவம்பர் 02 ஆம் திகதிய சபை தீர்மானத்தின்படி இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இங்கு செயற்றிட்டத்தை இனங்காணும்போதும் செயற்றிட்ட காலத்தை நிர்ணயிக்கும்போதும் பிரதான காரணியான போட்டித்தன்மையினால் ஏற்படும் தாக்கம் பற்றி கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்தச்செயற்றிட்டத்தை இனங்காணும் சந்தர்ப்பத்தில் போட்டித்தன்மையினால் ஏற்படும் தாக்கத்தை கருத்தில் எடுத்திருந்ததுடன் அதுவரையில் வேறு இந்நாட்டு நிறுவனம் எதுவும் இத்தகைய மருந்தினை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும், இந்த ஆராய்ச்சி நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியினுள் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பிரயோகரீதியாக இந்த மருந்தினை உற்பத்தி செய்கையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியமையினால் எதிர்பார்த்த காலப்பகுதியினுள் இலக்காகக் கொண்ட சாதனை மட்டங்களுக்கு வருவதற்கு முடியாமற்போனது. இது தொடர்பில் உருவாகிய பிரச்சினை குறித்த தனியார் நிறுவனம் மூலமே தே.ஆ.பே. விழிப்பூட்டப்பட்டதுடன், இறுதி பெறுபேற்றினை அடைவதற்கு இன்னும் அதிக காலம் செல்லும் எனவும், பெருமளவு கிரயம் தேவைப்படும் எனவுமாகும். அத்துடன், ஏனைய போட்டிக் கம்பனிகளினால் இதனை உற்பத்தி செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பதனால் அதிக செலவிலான செயற்றிட்டத்தை நிறுத்துவது மிகப் பொருத்தமானது என செயற்றிட்ட பங்காளர்களினதும் தேசிய ஆராய்ச்சி பேரவையினதும் தீர்மானமாக அமைந்தது. | ஆராய்ச்சிகளை பொறுப்பேற்பதற்கு முன் அதற்கு தாக்கம் செலுத்தக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் போட்டித்தன்மை ஆகிய காரணிகளை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டான பேரவையின் அளிப்புகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டதெனினும் 2019 மே மாதம் வரையிலும் பயன்படுத்தாது காணப்படும் ரூபா 2,869,904 பெறுமதியான உபகரணங்கள் பிரயோசனமிக்க பணிக்கு பயன்படுத்தி இருக்கவில்லை. | இந்த செயற்றிட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டபோது செயற்றிட்ட பங்காளர்களினது வேண்டுகோளாக அமைந்தது யாதெனில், ஏனைய மருந்தாக்கவியல் ஆராய்ச்சி பொருட்டு இந்த உபகரணங்களை பயன்படுத்த முடியும் என்பதனால் அரசாங்கத்தின் விலைமதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்டதன் பிற்பாடு குறித்த உபகரணங்களை தனியார் பங்காளருக்கு பெற்றுக் கொடுக்குமாறு ஆகும். அவ்வேண்டுகோள் 2019.02.22 ஆம் திகதி நடைபெற்ற தே.ஆ.பே. குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்த உபகரணங்கள் | ஆராய்ச்சி பொருட்டு கொள்வனவு செய்யும் சொத்துக்களை பிரயோசனமிக்க பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என. |

தற்போது தனியார் பங்காளரினது ஆய்வுகூடத்தில் நிறுவப்பட்டிருப்பதுடன் குறித்த மருந்தாக்கவியல் ஆராய்ச்சி பொருட்டு பயன்படுத்தப்படுகிறது. இந்த உபகரணங்கள் பொருட்டு அரசாங்கத்தின் விலைமதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு தே.ஆ.பே. நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதனை அறிவிக்க விரும்புகிறோம்.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய ஆராய்ச்சி பேரவை அளிப்பு செய்கின்ற தனிநபர் ஆராய்ச்சி செயற்றிட்டங்கள், குறிக்கோள்மிகு பல்விடய ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் மற்றும் அரச தனியார் பங்குடமை ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் என்பனவற்றை நடைமுறைப்படுத்திய போதிலும், மீளாய்வாண்டு பொருட்டு தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தின் ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் வெவ்வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டுக்குரிய செயல் திட்டம் மூலம் ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்றிட்டம் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. | செயல் திட்டம் மூலம் நிதிசார் மற்றும் பௌதிக திட்டங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என. |